ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/41 - 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.05

*2065/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 57 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை.

கொழும்பு,
*2018, மாச்சு 20.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு) விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு ஒன்றைப்பேணுதல் வேண்டும்; அதன் விபரங்கள் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றன.

1A - G 27421 - 12 (2018/04)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டில் பேணப்பட வேண்டிய விபரங்கள்:-

1. ஒப்பந்தக்காரரின் பெயரும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியும்.
2. ஒப்பந்தக்காரருடன் தொடர்பு கொள்ளும் விபரங்கள்.
3. முகாமைப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலரின் பெயர்.
4. பதிவுசெய்தல் தரமும் விசேடத்துவமும்.
5. அத்தகைய ஒப்பந்தக்காரருக்கு குறித்தளிக்கப்பட்ட பதிவிலக்கம்.
6. பதிவுத் தேதியும் அத்தகைய பதிவு செல்லுபடியாகும் காலமும்.

*4 - 722/1*